# நல்லூர்
# ஸ்ரீ கமலாம்பிகா சமேத
# ஸ்ரீ கைலாசநாதசுவாமி தேவஸ்தானம்
# (நல்லூர் சிவன் கோவில்)
# திருவூடல்



உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# யாழ்ப்பாணம் – நல்லூர்
# ஸ்ரீகமலாம்பிகா சமேத ஸ்ரீகைலாசநாதசுவாமி
# தேவஸ்தானம்

மார்கழி மாசத் திருவாதிரையிலே

ஓதப்பெற்று வரும்

# திருவூடல்

**02.01.2018**

## *முன்னுரை*

நல்லூர் ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீகைலாச நாதசுவாமி தேவஸ்தானத்தின் இருதயஸ்தானத்தில் விளங்கும் சன்னிதானம் ஸ்ரீ சிவகாமி அம்பாளுடன் உறையும் ஸ்ரீநடராஜரது சன்னிதானமாகும். இவ் வாலயத்தில் நடராஜருக்குரிய அபிஷேகங்கள் ஆறும் கிராமமாக நடைபெற்று வருவது வழக்கம். அவ் ஆறு அபிஷேகங்களுள் ஆனி உத்தரம் மார்கழித்திருவாதிரை ஆகியன சிறப்புடையவையாகும்.

இவ்வாண்டு ஸ்ரீ கைலாசநாதப் பெருமானுக்கு மார்கழித் திருவெம்பாவை தொடக்க நாட்களில் துவஜாரோஹணமாசி மார்கழித் திருவாதிரை நாளில் இரதோற்சவத்தினை பிரதானமாகக் கொண்டு பதினொரு தினங்கள் மஹோற்சவம் நடை பெற்று வருகின்றது.இவ்வாலய வரலாற்றில் முதன்முறையாக நூற்றியொரு(101) வருடங்களின் பின் நடைபெறும் இவ்வுற்சவகாலத்து விஷேசங்களுள் பாரம்பரிய முறைப்படியாக திருவூடலும் நடைபெற்றுவருவது சிறப்புடைய விடயமாகும்.

உற்சவம் என்பது சிவப்பரம்பொருளால் படைத்தல் முதலான பஞ்சகிருத்தியங்களையும் ஆன்மாக்களுக்காக அருளும் நோக்குடன் மேற் கொள்வதாகும். நடராஜமூர்த்தியினது தாண்டவமானது உலக இயக்கத்திற்கும் உலகைக் காப்பதற்கான சிறப்புடையது. இவ்வாறான சிறப்புடைய உற்சவத்தில் திருவூடல் என்பது அனுக்கிரகத்தை உணர்த்திடும் தன்மையது.

பவிஷ்யோத்திர புராணத்தில் இடம்பெறும் கதைமரபை அனுசரித்து தமிழில் திருமுறைகளை நிலைக்காக் கொண்டு தொகுக்கப்பட்ட விடயமேதிருவூடல் என இந்நூலின் உள்ளடங்கலாகின்றது.

உலக இயக்கமே சிவசக்தி எனும் மேன்மை தெளிவு பெறுவதற்காக இறைவன் இறைவியரின் லீலாவினோதமே இத்திருவூடல் ஆகும். தமிழ் மரபில் திருவூடல் மரபினை வட்டுக்கோட்டை வரகவி பிரம்மஸ்ரீ நா.சிவசுப்பிரமணிய சிவாச்சாரியார் அவர்களே உருவாக்கியவராவர். அவர் மரபில் காரைநகர் சிவஸ்ரீ கணபதீஸ்வரக்குருக்கள் அவர்களது பிரதிகளும் ஒத்ததன்மையுடைவை.

திருவூடல் நூலின் பிரதிகள் பலரிடரும் காணப்படாது இருக்கின்றமையை உணர்ந்து இந்நூல் வெளிக்கொணரப்படுகின்றது. இந் நூலுடன் மகோற்சவ மகோற்சவகால நவசந்திப் பண்களுக்குரிய தேவாரங்களும் இடம் பெறுகின்றன.

மார்கழிமாதத்து திருவாதிரை நன்னாளில் சிவனடியார்கள் போற்றிப் பயனடையும் வகையில் இந்நூலை ஒன்று தொகுத்து பதிப்பித்து வெளியீட்டு ஸ்ரீ கமலாம்பிகா சமேத ஸ்ரீ கைலாசநாதசுவாமிகளின் திருவடிகளில் சமர்ப்பிக்கின்றோம்.

*"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"*

பிரம்மஸ்ரீ ச.பத்மநாபன்
தலைவர், சம்ஸ்கிருதத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பிரதமகுருவும் தர்மகர்த்தாவும்
கமலாம்பிகா சமேத கைலாசநாதசுவாமி தேவஸ்தானம்
நல்லூர்.
யாழ்ப்பாணம்.
01.01.2018.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# திருவூடல்

## கணபதி வணக்கம்

திருவாரும் நதிசூழும் கயிலாய நாதருடன்
சேர்ந்து வாழும்
மருவாரும் குழலுமையாள் திருவூடல் தனையுலகில்
மகிழ்ந்து பாட
தருவாரு மானந்த வல்லபையை யிடப்பாகந்
தரித்த முக்கட்
கருவாருந் தொந்திவயிற் றைங்கரன் பொற்பாதங்
கருத்துள் வைப்பாம்

சகலபுவனங்களுக்கும் சிருஷ்டி, திதி சங்கார திரோப வானுக்கிரக கர்த்தாவாகிய பரமசிவன் பிரபஞ்சத்திலே சகல ஆன்மாக்களுக்கும் அனுக்கிரகம் செய்ய வேண்டும் என்ற பெருங்கருணையினாலே, பஞ்ச கிருத்திய நடனம் செய்தரு ளுகின்ற இருதயஸ்தானமாகிய சிதம்பரத்துக் கனகசபையின் கண்ணே மார்கழி மாசத்துத் திருவாதிரையிலே மகா அபிஷேக நிவேதனங்கொண்டருளிய உதயகாலத்தில் எழுந்தருளி உள்ளே பிரவேசிக்கும் பொழுது, கங்கைசடைக்கரந்த கள்ளத்தை உணர்ந்த சிவகாமி அம்மையார் முன்னதாகச் சென்று திருக்கோயிற் கபாட பந்தனம்பண்ணி, திருவூடல் கொண்டார்.

இந்த ஊடலைத் தீர்ப்பதற்காகச் சர்வலோக ஏகநா யகரான சிவபிரான் சுந்தரமூர்த்தி நாயனாரைத் திருவுளம் கொண்ட பொழுது தம்பிரான் குறிங்பையறிந்த சுந்தர மூர்த்திநாயனார் சகல விருதுகளுடனும் எழுந்தருளி, தம்பிரானரது திருச்சந்நிதானம் வருகின்றார்.

நம்பியாரூரன் வந்தான் நாவலூர் னம்பி வந்தான்
உம்பரா லறிய வெண்ணா வுண்மைகளுரைப்பான் வந்தான்
செல்பொனால் மதில்கள் சூழ்ந்த திகழ் செல்வத் திருவாரூரில்
தம்பிரான் றோழன் வந்தான் என்றன தாரைசின்னம்.

சுந்தரர் சுவாமி சந்நிதானத்தில் வணங்குதல்.

தேவாரம் ( பண் : திருநேரிசை )

விண்ணினார் விண்ணின்மிக்கார் வேதங்கள் விரும்பியோதப்
பண்ணினார் கின்னரங்கள் பத்தர்கள் பாடியாடக்
கண்ணினார் கண்ணினுள்ளே சோதியாய் நின்ற வெந்தை
மண்ணினார் வலங்கொண்டேத்து மாமறைக் காடனாரே.

பரமகபருண்யராகிய சுவாமி சுந்தரமூர்த்தி நாயனா ருக்கு நிகழ்ந்தவைகளை அருளிச் செய்து, அம்மை யாரது திருவூடலைத் தீர்க்கும் படி ஆக்ஞாபித்து அனுப்பும் பொழுது அவர் சிவசந்நிதியிலே விண்ணப்பஞ் செய்து ஓதும் தேவாரம் :-

(பண் : - கொல்லிக்கௌவாணம் )

பத்தூர்ப்புக் கிரந்துண்டு பலபதிகம் பாடி
பாவையரைக் கிறிபேசிப் படிறாடித் திரிவீர்
செத்தார்த்த மெலும் பணிந்து சேவேறித் திரிவீர்
செல்வத்தை மறைத்துவைத்தீ ரெனக்கொருநாளிரங்கீர்
முத்தார மிலங்கிமிளிர் மணிவயிரக் கோவை
யவைபூணத் தந்தருளி மேய்க்கினிதா நாறும்
கத்தூரி கமழ்சாந்து பணிதருள வேண்டுங்
கடனாகைக் காரோணம் மேவியிருந் தீரே.

இந்தத் தேவாரத்தை சுந்தரமூர்த்தி நாயனார் சிவசந்நிதானத்திலே விண்ணப்பம் செய்தவுடன் சர்வானுக் கிரகராகிய சுவாமி சுந்தரமூர்த்தி நாயனாருக்கு அருள் செய்து, பார்வதி தேவியாரது ஊடல் மட்டுமல்ல, கங்காதேவிக்கும் நாம் வெறுப்பானோம் என்றும், பட்சபாதமில்லாமல் இரு வரையும் சமமாகவே எண்ணுவோமென்று சொல்லிவிடுக்க,

சுந்தரமூர்த்தி நாயனார் சர்வ உலகநாயகியாகிய பார்வதி தேவியார் சந்நிதானஞ்சென்று விண்ணப்பம் செய்து ஓதும்

தேவாரம் :- (பண் :- திருநேரிசை)

**ஒருத்திதன் றலைச்சென்றாளைக் கரந்திட்டா னுலகமேத்த**
**ஒருத்திக்கு நல்லனாகி மறுப்படுத்தொழித்து மீண்டே**
**ஒருத்தியைப் பாகம் வைத்தா னுணர்வினா லையமுண்ணி**
**ஒருத்திக்கு நல்லனல்ல னொற்றியூ ருடையகோவே.**

இந்த தேவாரத்தைச் செவிமடுத்தருளிய மலை யரசன் புத்திரியாகிய உமாதேவியார் சுந்தரமூர்த்தி நாயநாருக்குத்திருவுளம் பற்றலாவது:-

"பார்வதியார் ஊடல் மட்டு மல்ல, கங்காதேவிக்கும் வெறுப்பானோ மென்றும், இருவரையும் சமமாக எண்ணு வோம் என்றும்" புகன்ற தாகச் சொன்னீர் "நீரும் நல்ல புத்திமானே ! உமது கர்த்தாவும் பெரியரேயாம், இவைகள் எல்லாம் உங்களுக்கே செல்லும்" என்றும் பாங்கியரும் தாமுமாக ஆட்சேபஞ் செய்து வெளியே செல்க என்றதும்,

சுந்தரமூர்த்தி நாயனார் சர்வஞ்ஞரகிய சுவாமி சந்நிதானத் திலே சென்று நடந்தவற்றை விண்ணப்பம் செய்து ஓதும் தேவாரம் :-

தேவாரம் ( பண் :- திருநேரிசை )

கங்கையைச் சடையுள் வைத்தார் கதிர்பொறியரவும் வைத்தார்
திங்களைத் திகழவைத்தார் திசை திசை தொழவும் வைத்தார்
மங்கையைப் பாகம் வைத்தார் மான்மறி மழுவும் வைத்தார்
அங்கையு ளனலும் வைத்தா ரையனை யாறனாரே.

தேவாரம் ( பண் :- சீகாமரம் )

மங்கை வாணுதன் மான்மனத்திடை வாடியூட மணங்கமழ்சடைக்
கங்கையா ளிருந்த கருத்தாவதென்னை கொலாம்
பங்கயமது வுண்டு வண்டிசைபாட மாமயி லாட விண்முழ
வங்கையா லதிர்க்கும் ஆமாத்தூ ரம்மானே

இந்தத் தேவாரங்களைச் சுவாமி சந்நிதியிலே விண்ணப்பம் செய்யக் கேட்டருயளிய பரமேசுவரன் சுந்தரமூர்த்திநாயனாருக்குத் திருவுளம் பற்றியருளுவது :-

முன்னொரு காலத்திலே உமக்கும் பரவையாருக்கும் உள்ள ஊடலை நாமல்லவா தீர்த்து வைத்தோம். நீர் எந்த வகையினாலும் பார்வதிதேவியாரது ஊடலைத்தீர்த்து, பார்வதிதேவியாரை நம்மிடம் அழைத்து வாருமென்று ஆக்ஞாபித்தபொழுது,

சுந்தரமூர்த்தி நாயனார் மலையடிவாரங்களிலே தவம் செய்து கொண்டிருக்கும் முனிசிரேட்டர்களாகிய ரிஷிகளிடத்தில் சென்று கூறியதாவது:

சர்வானுக்கிரக பதியாகிய பரமேசுவரனுக்கும் உலகரட்சணி யாகிய பார்வதி தேவியாருக்கும் ஊடல் ஏற்பட்டதால் சுவாமியின் கட்டளைப்படி ஊடலைத் தீர்க்க பார்வதியம்மையார் யாம் ஓதுவதை அங்கீகரிக்கின்றாரி ல்லை. அடியேன் இருவரது வெறுப்புக்கம் ஆளாகின்றேன். வேதசிகரசுகளை ஆராய்கின்ற நீங்கள் இதற்கு ஒரு உபாயம் சொல்லவேண்டும் என முறையிட, முனி புங்கவர்கள் சுந்தரமூர்த்தி நாயனாரைப் பார்த்து அருள்கூர்ந்து கூறுவது:

உமக்கும் பரவைநாச்சியாருக்கும் உண்டான ஊடலைத் தீர்க்க சர்வ சுந்தர்யாமியாகிய சுவாமியைத் தூதுவிட்ட மகாத்து மாவே! எங்களுக்கு இதற்கு உபாயம் தெரியாது. நீர் தானே எற்ற உபாயம் கண்டு தீர்த்து வைக்க வெண்டும் என்று கூறிவிட, சுந்தரமூர்த்தி நாயனார் சர்வானுக்கிரக காரணியாகிய உமா தேவியார் சந்நிதானஞ் சென்று ஓதும் தேவாரம்

திருவிருத்தம்

கற்றர் பயில்கட னாகைக்கா ரோகணத்தெங் கண்ணுதலே
விற்றங் கியகரம் வேல்னெடுங் கண்ணி வியன்கரமே
நற்று ணெடுஞ்சிலை நாண்வலித் தகர நின்கரமே
செற்றர் புரஞ்செற்ற சேவகமென்னைகொல் செப்புமினே.

இந்தத் தேவாரத்தை உமாதேவியார் கேட்டருளிச் சுந்தர மூர்த்திநாயனாரைப் பார்த்து பாங்கிமாருந்தாமுமாகக் கூறுவது:

கேளும் சுந்தரரே! நீர் கூறியவைகள் யாவும் சரிதான். திரிபுரத கனம் செய்தவீரம் என்னுடையதென்கிறீர். அதுவுமின்றி பிரம விஷ்ணு, உருத்திரன், மகேஸ்வரன், சதாசிவன் என்கின்ற பஞ்ச கர்த்தாக்களும் ஆகிற பஞ்ச கிருத்தியத்தை என்னுள் ஆகவேண்டுமென்றும் சொல்லுகிறீரே இது உமக்கும் உமது கர்த்தாவுக்கும் தெரியா ததல்லவே: என்று ஆட்சேபித்து போம்! போம்! என்று சொல்லி விட்டார்கள்.

சுந்தரமூர்த்திநாயனார் சுவாமி சந்நிதானம் சென்று விண்ணப்பம் செய்து ஓதும் தேவாரம்:

(பண் கொல்லிக் கௌவாணம்)

பூண்பதோர் இளவாமை பொருவிடையொன் றேறிப்
பொல்லாத வேடங் கொண் ரெல்லாருங் காணப்
பாண்பேசிப் படுதலையிற் பலிகொள்கை தவிரீர்
பாம்பினெடு படர் சடைமேல் மதிவைத்த பண்பீர்
வீண்பேசி மடவார்கை வெள்வளைகள் கொண்டால்
வெற்பரையன் மடப்பாவை பொறுக்குமோ சொல்லீர்
காண்பினிய மணிமாடம் நிறைந்த நெடு வீதிக்
கடல்நாகைக் காரோணம் மேவியிருந் தீரே.

இந்தத் தேவாரத்தைத் சுந்தரமூர்த்திநாயனார் சர்வானுக்கி ரகபதியாகிய சிவசந்நிதிதானத்திலே விண்ண ப்பம் செய்த பொழுது சுந்தரமூர்த்தி நாயனாருக்குத் திருவருள் நோக்கம் புரிந்து பரம கருணமூர்த்தியாகிய சுவாமி, சுந்தரரே, அவ்வாறே கங்கையைச் சடா பாரத்திலே சுவறச் செய்கிறோம். பார்வதிதேவியாரது ஊடலை எது விதத்திலும் தீர்த்து வாருமென்று சுந்தமூர்த்தி நாயனாருக்கு ஆக்ஞாபிக்க, சுந்தமூர்த்திநாயனார் உலக மாதாவாகிய பார்வதி தேவியாரது திருச்சந்நிதானம் சென்று, விண்ணப்பத்தைத் திருச்செவி சாய்த்தருள வேண்டுமென அஞ்சலியஸ்தராய் ஓதும் தேவாரம்:

பண் – நேரிசை

கூடினா ருமைதன்னோடே குறிப்புடை வேடங் கொண்டு
சூடினார் கங்கையாளைச் சுவறிடு சடையார் போலும்
பாடினார் சாமவேதம் பைம் பொழிற் பழனை மேயார்
ஆடினார் காளிகாண வாலங்காட் டடிகளாரே.

என்று இந்தத் தேவாரத்தைச் சுந்தரமூர்த்திநாயனார் விண்ணப்பஞ் செய்து கொள்ள, பார்வதிதேவியார் தேவாரத்தைக் கேட்டவுடனே மகிழ்ச்சி இல்லாதவராய்க் கூறுவது:

என்னை ஒரு பாகத்தில் வைத்தார் என்றீர். அவளைச் சடையுளே ஒளித்தார் என்றீர், ஆகையால் அவள் என்னிலும் விசேட முடையவளாயிற்றே, உமது கர்த்தாவுடைய பராக்கிரமத்தை நீரே வியந்து கொள்ளும்! என்று ஏளனம் பண்ணி இவ்விடத்தே நில்லாது போகும் படி சொன்னார்கள்.

அப்பொழுது சுந்தரமூர்த்திநாயனார் கருணைக்கடலாகிய சிவசந்நிதியை யடைந்து ஓதும் தேவாரம்,

(பண் – திருநேரிசை)

கங்கைநீர் சடையுள் வைக்கக் காண்டலு மங்கையூடத்
தென்கையான் றேர்கடாவிச் சென்றெடுத் தான்மலையை
முன்கைமா நரம்புவெட்டி முன்னிருக் கிசைகள் பாட
அங்கைவா ளருளினுனூர் அணிமறைக் காடுதானே.

(பண் – கொல்லிக்கௌவாணம்)

தூசுடைய வகலல்குல் தூமொழியா ளூடல்
தொலையாத காலத்தோர் சொற்பாடாய் வந்து
தேசுடைய விலங்கையர்கோன் வரையெடுக்க வடர்த்துக்
திப்பியகீ தம்பாடத் தேரொடுவாள் கொடுத்தீர்
நேசமுடைய யடியவர்கள் வருந்தாமை யருந்த
நிறையமறையோ ருறை வீழி மிழலைதனில் நித்தல்
காசருளிச் செய்தீரின் றெனக்கருள வேண்டும்
கடனுகைக் காரோணம் மேவியிருத் தீரே.

இந்தத் தேவாரங்களைச் சுந்தரமூர்த்திநாயனார் கயிலாச பதியாகிய சிவபிரான் சந்நிதியிலே விண்ணப்பஞ் செய்து அடியேனுக்கு எம்பெருமாட்டியின் இந்த ஊடலைத் தீர்த்து கொள்ள முடிய வில்லையே என்று சிவபொருமான் சுந்தரமூர்த்தி நாயனாருக்குத் திருவுளம் பற்றியருளுவதாவது:

முன்னொருகாலத்தில் திருக்கயிலையில் நமக்கம் பார்வதி தேவியாருக்கும் ஊடல் உண்டாகிய அநேககாலம் தீராமலே இருந்த பொழுது, இராவணன் கயிலா சபபர்வதத்தைப் பெயர்த்தெடுக்க, அதனால் அசைவுண்டாக, அப்பொழுது பார்வதி தேவியார் அஞ்சி ஊடலை ஒழித்து நம்மைத் தழுவிக் கொண்டார். அச்சமயம் நாம் பெருவிரலாலூன்ற இராவணன் உடல் நெரிந்து வருந்திக் கொண்டிருந்த பொழுது கைலைப் பிரதக்ஷணம் செய்து கொண்டு வந்த நாரத மகாமுனிவர், இராவணனைப் பார்த்து, :இராவணனே, நீ எம் பெருமானுக்கு மகா அபாராதததைச் செய்து விட்டாய்.

இதைத் தீர்த்துக் கொள்ளும் உபாயம் சொல்லு கிறேன் கேட்பாயாக: நமது பெருமான் சாமகானப் பிரியர். நீ சாமவேதத்தை யாழிசையோடு சேர்த்துப் பாடினால், இறைவர் சகல அனுக்கிரகங்களையும் செய்துதருளுவார். என்று கூறிச் சென்றார். இராவணன் அவ்வாறே தன் சிரங்களில் ஒன்றைக் கிள்ளி, கரங்களில் ஒன்றை முரித்து, யாழமைத்த, சாமகானஞ் செய்ய, அதைக்கேட்டு மனமகிழ்ச்சி கொண்ட உமா தேவியார் அவனுக்கு அருள் செய்யும் படி வேண்டிக் கொள்ள, அந்த வேண்டுகோளுக்கிணங்கி இராவணனுக்கு அனுக்கிரகித்தோம். இப்பொழுதும் சாமகானஞ் செய்யின் ஊடல் தீர்ந்து மகிழ்ச்சியடைவாரென்று திருவாய் மலர்ந்து சாம வேதத்தைக் கூறியருளினார்.

அவ்வோறே சுந்தரமூர்த்திநாயனார் பார்வதி தேவியார் சந்நிதானம் சென்று ஓதும் சாமவேதம்:

ஊதயூாஃ ஶர்யஊாஷெ। ஹா(ந) வுஹா(ந) வுஹா(ந) வு। ஃஹஃஊஃஹஃஊஃஹஃஊ। ஃஹஃஊாஜொ(உ)ஹஃஊாஜொ(உ)ஹஃஊாஃ। ஃஹ௵பெூாகஃஷூஉஹ௵பெூாகஃஷூஉஹ௵பெூாகஃஷூஃ। ஃஹஃஷி ஒுயஃஜா ஜுகா(ந)ஸு உூவபூநெவெஜொ ஃஷூதஸூநா(ந)ஶாஜ। யொஃாஃஃாதி ஷஜஉெவஃா(ந)வாஃ। ஃஹஃஊஃஃஃஊஜா(ந)ஜி। ஃஹஷிஷூ ஹுவ்நஃஜூஹவா। ஷுவநூஜொாதீ। யஊவ வெஃ।

சுந்தரமூர்த்திநாயனார்பாடிய சாமவேதகானம் பார்வதி தேவியாருடைய திருச்செவிகளில் சார்தலும் தமக்கு அபின்னாமா யுள்ள இறைவருடன் தாம் ஊடுவதும் கூடுவதும் உலகிலுள்ள ஆன்மாக்கள் பொருட்டே என்பதை உணர்ந்து, அப்பெருமானுடைய பெருமையை நினைந்து "ஊரன் மற்றியாவர்க்கும் ஊதியமாந்" தன்மையைத் திருவுளத்தடைந்து ஊடலை ஒழித்துத் தமது நாயகரது இடப்பாகத்தையடைந்து தழுவிக்கொண்ட சமயத்தில் தம்பிரான் தோழராகிய சுந்தரமூர்த்திநாயனார் திருச்சந்நிதானத்தில் ஓதும் தேவாரம்:

(பண்: திருநேரிசை)

சூடினார் கங்கையாளைச் சூடிய துழனி கேட்டங்
கூடினார் ணங்கையாளு மூடலை யொழிக்க வேண்டிப்
பாடினார் சாமவேதம் பாடிய பாணியாலே
ஆடினார் கெடிலவேலி யதிகை வீரட்டனாரே.

---

**மஹோற்சவ நவசந்தி**

கோவில்களில் திருவிழாக்கள் நிகழும் போதும், கொடியேற்றம் வேளையிலும், கொடியிறக்கும் வேளை யிலும், கொடித்தம்பத்தின் முன்னும் எட்டுத் திசைகளிலும் பாடப்பட வேண்டிய பண்களுள் சில.

திருச்சிற்றம்பலம்

இடம்: தம்பம் 1 பண்: தக்கராகம்

தேவாரம்– திருஞானசம்பந்தர்

திருமுறை 1

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுகீழ்
உடையுங் கொண்ட வுருவ மென்கொலோ.

துணிவளர் திங்கள் துளங்கிளங்கச் சுடர்ச்சடை சுற்றிமுத்துப்
பணிவளர்கொள்கையர் பாரிடஞ்சூழ வாரிடம் பலித்தேர்வர்
அணிவளர்கோல மெலாஞ்செய்துபாச்சி லாச்சிரா மத்துறைகின்ற
மணிவளர்கண்டரோ மங்கையைவாட மயல்செய்வதோ இவர்
(மாண்பே)

இடம்: தம்பம் பண்:காந்தாரம்

இராகம்: கேதாரகௌளம்

தேவாரம்– திருஞானசம்பந்தர்

திருமுறை 2

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப் படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்தி லுள்ளது நீறு
செந்துவர் வாயுமை பங்கன் திரு ஆல வாயான் திருநீறே.

பூச இனியது நீறு புண்ணிய மாவது நீறு
பேச இனியது நீறு பெருந்தவத் தோர்களுக் கெல்லாம்
ஆசை கெடுப்பது நீறு அந்தம தாவது நீறு
தேசம் புகழ்வது நீறு திரு ஆல வாயான் திருநீறே.

இடம்: மத்தி     இராகம் : சிலாம்பரி
பண்: மேகராகக் குறிஞ்சி
தேவாரம் – திருஞானசம்பந்தர் – திருமுறை

நீறுசேர்வதொர் மேனியர்நேரிழை
கூறுசேர்வதொர் கோலமாய்ப்
பாறுசேர்தலைக் கையர்பராய்த்துறை
ஆறுசேர்சடை அண்ணலே

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி
யறிவழிந்திட் டைம்மேலுந்தி
அலமந்த போதாக அஞ்சலேன்
றருள் செய்வான் அமருங்கோயில்
வலம்வந்த மடவார்கள் நடமாட
முழவதிர மழையென் றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி
முகில்பார்க்குந் திருவையாறே.

இடம்: கிழக்கு பண்: காந்தாரம்
தேவன்: இந்திரன் இராகம்: நவரோஸ்
தேவாரம் – திருஞானசம்பந்தர்

திருமுறை –2

முத்தி தருவது நீறு முனிவ ரணிவது நீறு
சத்திய மாவது நீறு தக்கோர் புகழ்வது நீறு
பக்தி தருவது நீறு பரவ இனியது நீறு
சித்தி தருவது நீறு திரு ஆல வாயான் திருநீறே.

தேவாரம்– திருநாவுக்கரசு சுவாமிகள்

திருமுறை –4

மாதர்ப் பிறைக்கண்ணி யானை
மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப்
புகுவார் அவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல்
ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங்
களிறு வருவன கண்டேன்
கண்டேன் வெர்திருப் பாதங்
கண்டறி யாதன கண்டேன்.

இடம்: தென்கிழக்கு பண்: கொல்லி
தேவன்: அக்கினி இராகம்:நவரோஸ்
தேவாரம்– திருஞானசம்பந்தர்

திருமுறை –3

மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கு யாதுமோர் குறைவிலைக்
கண்ணினல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணில்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

தேவாரம் – திருநாவுக்கரசு சுவாமிகள்

திருமுறை –4

கூற்றா யினவாறு விலக்ககிலீர் கொடுமைபல
செய்தன நானறியேன்
ஏற்றா யடிக்கே இர வும்பகலும் பிரியாது
வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே குடரோடு
துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடி யேன் அதி கைக்கெடில வீரட்டா
னத்துறை யம்மானே.

இடம்: தெற்கு — பண்: கௌசிகம்
தேவன்: யமன் — இராகம்: பைரவி

தேவாரம் – திருஞானசம்பந்தர்

திருமுறை–3

காத லாகிக் கசிந்துகண் ணீர்மல்கி
ஓது வார்தமை நன்னெறிக் குய்ப்பது
வேதம் நான்கினும் மெய்பொரு ளாவது
நாதன் நாமம் நமச்சி வாயவே.

வாழ்க அந்தணர் வானவர் ஆனினம்
வீழ்க தண்புனல் வேந்தனும் ஓங்குக
ஆழ்க தீயதெல் லாம்அரன் நாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்க்கவே.

இடம் : தென்மேற்கு தேவன் : நிருதி
பண்: நட்டபாடை இராகம்: நாட்டை
தேவாரம் – திருஞானசம்பந்தர்

திருமுறை –1

உண்ணாமுலை உமையாளொடு உடனைகிய வொருவன்
பெண்ணுகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணுர்ந்தன அருவித்திரள் மழலைம்முழ அதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ணம்
அறுமே மையாடிய கண்டன்மலை மகள்பாகம துடையான்
கையாடிய கேடில்கரி யுரிமூடிய வொருவன்
செய்யாடிய குவளைம்மலர் நயனத்தவ ளோடு
நெய்யாாடிய பெருமானிடம் நெய்த்தானமென் னீரே.

இடம் : மேற்கு தேவன் :வருணன்
பண்:சீகாமரம் இராகம்: நாதநாமக்கிரியை
தேவாரம் – திருஞானசம்பந்தர்

நாதநாமக்கிரியை

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினே டுள்ளநினை
வாயினைவே வரம்பெறுவர் ஐயுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையார் அவர் தம்மைத் தோயாவாந் தீவினையே.

கீதத்தை மிகப்பாடும் அடியார்கள் குடியாாகப்
பாதத்தைத் தொழநின்று பரஞ்சோதிப் பயிலுமிடம்
வேதத்தின் மந்திரத்தால் வெண்மணலே சிவமாகப்
போதத்தால் வழிபட்டான் புள்ளிருக்கு வேளுரே.

இடம்: வடமேற்கு பண்:தக்கேசி
இராகம்:கம்போதி தேவாரம்– திருஞானசம்பந்தர்

திருமுறை –1

வேதமோதி வெண்ணூல்பூண்டு வெள்ளையெருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார் புலியினுரிதோலார்
நாதாஎனவும் நக்காஎனவும் நம்பாஎனநின்று
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார் பழனநகராரே

தேவாரம்– சுந்தரமூர்த்தி சுவாமிகள் – திருமுறை–7

ஆலந்தானுகந் தமுது செய்தானை
ஆதியை அமரர்தொழு தேத்தும்
சீலந் தான்பெரி தும்முடையானைச்
சிந்திப் பாரவர் சிந்தையுளானை
ஏலவார் குழ லாமளுமை நங்கை
என்றும் ஏத்திவழிபடப் பெற்ற
காலகாலனைக் கம்பனெம் மானைக்
காணக்கண் அடியேன் பெற்ற வாறே.

இடம்: வடக்கு தேவன்: குபேரன் பண்: தக்கராகம்
இராகம்: கம்போதி தேவாரம் – திருஞானசம்பந்தர்

திருமுனை

நிழலார் சோலை நீல வண்டினங்
குழலார் பண்செய் கோலக் காவுளான்
கழலால் மொய்த்த பாதங் கைகளால்
தொழலார் க்கல் துயர மில்லையே.

தேவாரம் – சுந்தரமூர்த்தி சுவாமிகள்

திருமுறை – 7

குரும்பைமுலை மலர்க்குழலி கொண்டதவங் கண்டு குறிப்பினோடுஞ் சென்றவள் தன் குணத்தினை நன்கறிந்து விரும்புகின்ற வரங் கொடுத்தவளை வேட்டருளிச் செய்த விண்ணவர்கோன் கண்ணுதலொன் மேவிய ஊர்வினவில் அரும்பருகே சுரும்பருவ அரும்பதம் பண் பாட அணி மயில்கள் நடமாடும் அணிபொழில்சூழ் அயலின் கமலங்கள் முகமலரும் கலயநல்லூர் காணே.

இடம் : வடகிழக்கு தேவன் : ஈசானன்

பண்: சாளரபாணி இராகம் : ஆனந்தபைரவி

(இப்பன் தேவாரத்தில் இல்லை. திருவிசைப்பாவில் உண்டு)

திருவிசைப்பா – பூந்துருந்தி நம்பி காடநம்பி

திருமுறை – 9

எம்பந்த வல்வினைநோய் தீர்த்திட்டு எமையாளும்
சம்பந்தன் காழியர்கோன் தன்னையும் ஆட் கொண்டருளிய
அம்புந்து கண்ணுளுந் தானும் அணிதில்லைச்
செம்பொன்செய் அம்பலமே சேர்ந்திருக்கை ஆயிற்றே.
களையா உடலோடு சேரமான் ஆருரன்
விளையா மதமாற வெள்ளானை மேல்கொள்ள
முளையா மதி சூடி! மூவாயிரவ ரொடும்
அளையா விளையாடும் அம்பலம் நின் ஆடரங்கே.

திருச்சிற்றம்பலம்.



அச்சமைப்பு : : மதி கலர்ஸ் நல்லூர். 0212229285